தரிசனங்கள்

கண்ணீரை களிப்பாக்கினார்

மரண படுக்கையில் பல துன்பங்களை அனுபவித்த தன் தாயின் வேதனைகளை மறக்க முடியாமல் தவித்தாள் எஸ்தர். எப்பொழும் அதே நினைவாக அழுது கொண்டிருந்தாள்.

தாயின் மரண அவஸ்தையினால் இரவும பகலும் உண்ண முடியவில்லை, உறங்க முடியவில்லை. ஏன்? ஜெப நேரத்தில் கூட மனதை ஒரு முகப்படுத்த முடிவதில்லை.

'என் சமாதானத்தை வைத்துப் போகிறேன்' என்றீரே எங்கே அந்த சமாதானம்? என நேசரிடம் போராடினாள். தாயின் பிரிவுத்துயரைவிட அவள் அனுபவித்த வேதனைகளின் நினைவு மனதை பாரமாக அழுத்தியது. கல்வாரியை நோக்கி கதறினாள்.

அப்பொழுது, இருளை அகற்றி ஓர் ஒளி! கனிவான ஓர் பார்வை! பரிவான ஓர் குரல்! ''மகளே! உன் தாயின் வேதனைகளையே எண்ணும் நீ என்னை நோக்கிப் பார். நீ, நான் சகித்த வேதனைகளை மறந்தாயோ? அவைகள் யாருக்காக! உனக்காக அல்லவோ!

பாடனுபவிக்கப் பிறந்த மானிடரின் துன்பத்தை வேதனைகளை நானும் அனுபவிக்கவில்லையோ? மரண வேதனையும் எனக்குத தெரியும்'' என்றதைக் கேட்ட எஸ்தர் தன் நினைவுக்கு வந்தாள்.

ஆம்! வேதனைகளை சகித்தவண்ணம் தொங்கும் நேசரின் குரல் என அறிந்தாள். நன்றியோடு இறைவனின் பாதம் அமர்ந்தாள் நாதா! யாருக்காய் ஐயா இந்தபாடுகள்? என் இயேசுவே எனக்காக நீர் பட்ட பாடுகள் என் தாய் அனுபவித்த வேதனைகளைவிட ஏராளம் எனக் கண்ணீர் விட்டாள்.

இயேசுவின் சிலுவைக் காட்சி தாயின் மரண காட்சியை மறைத்து கண்ணீரைக் களிப்பாக மாற்றியது. தெய்வீக சமாதானம் உள்ளத்தை நிறைத்தது.

''தாயினும் மேல் அன்புள்ளவர்
காத்திடுவார் நம்மைத் தேற்றிடுவார்
கல்வாரியண்டை நீயும் வாராய் நீயும் வாராய்''

திருமதி. சுசிலா அப்பாதுரை, திருச்சி.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

தரிசனச் சுடர்...

தரிசனம்	சுடர்
3	6

Editor :
JAMES RATNARAJ

தியாக வாழ்வு 3

ஜெபத்துணைவன் 6

விசுவாசத்தின் நல்ல போராட்டம் 7

ஆண்டுச் சந்தா
மாணவர்க்கு ரூ 5/-
மாணவரல்லாதோர்க்கு ரூ 10/-

தொடர்பு முகவரி :

THARISANA SUDAR
UESI-TN OFFICE
Guru Medical Hall
TIRUCHI-17.

ஆசிரியரிடமிருந்து...

அன்புள்ள சகோதர சகோதரிகளுக்கு, ஆறுதலளிக்கிற தேவனுடைய நாமத்தில் அன்பான வாழ்த்துக்கள். உபத்திரவத்தில் தேவன் நமக்கு ஆறுதல் அளிக்கிறார். ஆதலால் உபத்திரவத்தின் மத்தியில் ஒரு விசுவாசி கடந்து செல்லும் போது அவன் உபத்திரவத்தின் கடலில் அழிந்து போவதில்லை. மாறாக துன்பத்தில் துவழும் மக்களுக்கும் பிரச்சனைகளில் மூழ்கும் மற்றவர்களுக்தும் உதவிசெய்யும் ஆற்றலைப் பெறுகின்றான்.

நமது ஊழியத்தின் பாதையிலும் பல பிரச்சினைகளையும் சாத்தானால் வரும் பல சோதனைகளையும் அடிக்கடி சந்திக்க வேண்டியதிருக்கிறது. ஆனால் இவை எல்லாவற்றிலும் இயேசு கிறிஸ்து வெற்றி அளிக்கிறார். அவருக்கே ஸ்தோத்திரம். மூவாண்டுப் பெருவிழாவில் ஏற்பட்ட பணத் தேவைகளை சந்திக்க அனேகர் மனமுவந்து அனுப்பிக்கொண்டிருக்கின்றனர். விரைவில் அத்தேவைகள் சந்திக்கப்படும் என நம்பி ஆண்டவரை ஸ்தோத்தரிக்கின்றேன்.

கடந்த மாதத்தில் சென்னை, செங்கல்பட்டு, தூத்துக்குடி, திருச்செந்தூர் ஆகிய இடங்களை நேரில் சந்திக்க தேவன் வாய்ப்புத் தந்தார். எங்கு சென்றாலும் மூவாண்டுப் பெருவிழாவின் விளைவுகளை உணர முடிகிறது; பல இடங்களில் நமது ஊழியத்தை தேவன் பலப்படுத்துகிறார். அவரை துதிப்போம்.

கோடை விடுமுறை நாட்களில் நடைபெறவிருக்கும் பயிற்சி முகாம்களுக்காக தீவிர முயற்சிகள் எடுக்கப்படுகிறது. அவைகளுக்காக ஜெபியுங்கள்.

தேர்வுகாலம் நெருங்கிவிட்டதென மார்ச் மாதம் சுட்டிக் காட்டுகிறது. உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கின்றோம். சிறப்பாக படித்து வெற்றிபெற கர்த்தர் தாமே உதவி செய்வாராக.

இப்படிக்கு
கிறிஸ்துவின் பணியில்
ஜேம்ஸ் இரத்தினராஜ்

தியாக வாழ்வு

[மூவாண்டுப் பெருவிழாவில் உலக சுவிசேஷ ஐக்கியத் தலைவர் Dr. டேவிட் ஹாவர்ட், அவர்கள் அளித்த செய்தியின் சாரம் தொகுப்பு : செல்வராஜ், திருச்சி.]

நம் வாழ்விலே இரு நிலைகளில் தியாக வாழ்வை மேற்கொள்ள நாம் அழைக்கப் படுகிறோம். முதலாவதாக தேவனுக்கு நேரான தியாக வாழ்வு. அடுத்தது மனிதருக்கு நேரான தியாக வாழ்வு.

தேவனுக்கு நேரான தியாகவாழ்வு

தேவனுக்கு அடுத்த காரியங்களில் நாம் தியாகத்தின் பாதையில் செல்ல முதல் அவசியம் அவரோடு நாம் வைத்துக் கொள்ள வேண்டிய உறவு. இதற்கு நமக்கு முன்னோடியாயிருப்பவர் யோபு அவரது சரித்திரத்தின் முதல் அத்தியாயத்தில் யோபு தேவனோடு கொண்டிருந்த உறவு சித்தரிக்கப்பட்டுள்ளது. அனுதினமும் அவர் தனது குடும்பத்தின் சார்பாக சர்வாங்க தகனபலியிட்டு, தன்னைப் படைத்தவரோடு தனக்கு இருக்கவேண்டிய நெருங்கிய உறவை சரிசெய்து கொள்ள கவனமாயிருந்தார். நமக்கும் கிறிஸ்து இயேசுவுக்கும் உள்ள உறவு எந்நிலையிலுள்ளது?

இரண்டாவதாக, இத்தகைய தியாக வாழ்வின் அடிப்படைத் தேவை தேவ வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படிதல் இதற்கு முன்மாதிரி 500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மார்டீன் லூதர். ஜெர்மானிய அரசர் மற்றும் சபைத்தலைவர்கள் முன் அவர் விசாரிக்கப்படும்போது கூறிய வார்த்தைகள், "I stand convicted by the scripture to which I have a fear. My conscience is taken captive by the word of God. I cannot and will not recast anything". இதன் விளைவாக சிறைத்தண்டனை பெற்றார். ரோமன் கத்தோலிக்க சபையிலிருந்து புறம்பாக்கவும் பட்டார். இது அவரின் தியாக வாழ்வு. நாம் ஆண்டவரின் வார்த்தையை எவ்விதம் மதிக்கிறோம்? தேவ வார்த்தைக்கு அடிபணிந்து உயிர்துறக்கவும் தயார் என்ற நிலையில் தியாக வாழ்வை மேற்கொண்டுள்ளோமா?

மூன்றாவதாக தேவனுக்காக **சரீரத்தையும் கூட தியாக பலியாக** வார்த்து விடுவது நம்முன் தங்கள் வாழ்வை விட்டுச் சென்ற இரத்த சாட்சிகள் இதற்கு மாதிரிகள். ஈக்குவெடார் பகுதியில் வாழும் ஆக்கா இனத்தவர் மத்தியில் உயிரிழக்க நேரிடும் என்ற உண்மை தெரிந்தும் வாஞ்சையுடன் தன் அன்பு இரட்சகரை அறிமுகப்படுத்தச் சென்று வீரமரணம் எய்திய ஜிம் எலியட், நமக்கு ஒரு சவால். கிழக்கு ஐரோப்பாவிலுள்ள பல்கேரியா என்னும் கம்யூனிச நாட்டின் தலைநகரான சோபியாவிலுள்ள பாப்திஸ்து ஆலயத்தில் செய்தி கொடுப்பதற்காக இரு மாதங்களுக்கு முன்னர் சென்றிருந்தேன். அச்சபையின் போதகரான ஐவன் பல ஆண்டுகளாக தேவனை உத்தமமாய் சேவித்து வருகிறார். இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின் மார்க்ஸிஸ்டுகள் அந்நாட்டை ஆளத் துவங்கியபின் ஐவன் மற்றும் பல போதகர்களைச் சிறைபிடித்து, அவர்கள் விசுவாசத்தைக் குலைக்க பல சித்திரவதைகள் செய்தனர். தேவை

ஏற்பட்டால் தன் சரீரத்தை பலியாய்க் கொடுக்கவும் ஐவன் தயாராயிருந்தார். ஒரு சமயத்தில் சிறைக் காவலாளி, ஐவனை துப்பாக்கி மறுமுனையால் இடித்துக் கீழேதள்ளி, மிகுதியாக உதைத்து விட்டான். நடக்க இயலாததால் சிறைக்குள் ஊர்ந்து சென்றார் ஐவன். அங்கே ஒரு மனிதனைப் போர்வைக்குள் போர்த்தி வைத்திருந்ததை அவர் கண்டார் சிறையில் பலவிதமாய் துன்புறும்போது, சித்தப்பிரமை பிடித்து, சாதாரணமாய் சொல்ல மறுக்கும் தகவல்களைச் சொல்லிவிடுவர். அதை அறிவதற்காக வைக்கப்பட்ட உளவாளி என அம்மனிதனைக் குறித்து ஐவன் எண்ணினார். மிகவும் சோர்வுற்றவராய் தேவனை நோக்கி சத்தமாக, 'ஆண்டவரே, இனி மேலும் என்னால் தாங்க முடியாதுஎன்றார்.'போர்வைக்குள்இருந்த மனிதன் ஐவன் என்ன சொல்லுகிறாய்?'' என்றான். ஐவன் மீண்டும அதையே சொன்னார். ''ஐவன், இயேசு இப்பொழுதும் உன்னோடிருக்கிறார் என உனக்குத் தெரியாதா?'' என அம்மனிதன் கேட்டான். ஐவன் மீண்டுமாக அம்மனிதனைத் திரும்பிப் பார்த்தபோது அவனைக் காணவில்லை. மறைந்து விட்டான். தனிப்பட்ட தேவையிருந்த, தன்னை உற்சாகப்படுத்த தேவன் தமது தூதனை அனுப்பினார்என உணர்ந்துகொண்ட ஐவன், எழுந்து, குதித்து தேவனை ஸ்தோத்தரித்தார் வெகு விரைவில் சிறையிலிருந்து விடுதலையானார். இன்று தனது எண்பதாவது வயதிலும் ஊழியம் செய்து வரும் அவர் நமக்கு ஓர் எடுத்துக்காட்டு.

II. மனிதருக்கு நேரான தியாக வாழ்வு:

இத் தியாக வாழ்விற்கு முதல் தேவை மற்றவருக்கும் நமக்கும் உள்ள உறவு. தேவனுக்காக நம்மை பலியாகக் கொடுப்பது மட்டுமல்ல மற்றவருக்கு சேவை செய்யவும் நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும் புதிய ஏற்பாடு சொல்லும் வரங்களில் இதுவும் ஒன்று. கிறிஸ்துவும் ஊழியங் கொள்ளும் படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். மத்தேயு 10:45 நம்மால் முடிந்த அளவு தேவையுள்ளோருக்கு சேவை செய்ய நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும் சிறிதும் அயராமல், தேவையுள்ளவரை உபசரித்தல். அவசியம் தேவன் எனக்குக் கொடுத்திருக்கும் மனைவிக்காக அவரை நான் ஸ்தோத்தரிக்கிறேன் தேவையுள்ளவர்களைக் கண்டு, அவர்களது தேவையைச் சந்திப்பதில் அவளுக்கு மிகுந்த ஆவல் உண்டு கடந்த ஆண்டுகளில், பெற்றோர்களால், கணவனால் கைவிடப்பட்ட பெண்களை அவள் எங்கள் இல்லத்திற்கு அழைத்து வந்து, அவர்களுக்கு பாதுகாப்பானநல்ல சூழ்நிலை அமையும் வரை எங்கள் வீட்டில் தங்க வைத்து பராமரித்து அனுப்பியிருக்கிறாள். இவ்விதம் செய்வது வசதிக் குறைவாகவும், சிரமமாகவும் இருக்கலாம் எனினும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய தன்னையே ஜீவ பலியாய் ஒப்புக் கொடுத்து தியாகமாய் இதைச் செய்கிறாள்.

இரண்டாவதாக, மற்றவர்களால் பாராட்டப்படாவிட்டாலும் மற்றவர்கள் அறியும்படியான ஊழி

யமாக இல்லாது போனாலும் உண்மையுடன் உழைப்பது. சில ஆண்டுகளுக்கு முன் தாய்லாந்தில் நடைபெற்ற சுவிசேஷகர்களின் கூடுகையின் போது அச்சுக்கூடத்தில் உதவிய Barry என்பவரின் தியாகவாழ்வு என் கண்முன் தோன்றுகிறது. கூடியவர்கள் பார்க்கஇயலா வண்ணம், அச்சுக்கூடத்திற்குள் செயலாற்றி வந்தாலும், சிலவேளையில் 24 மணி நேரம கூட அயராது உழைத்து தினமும் 75,000 பிரதிகளை அச்சிட்டு தியாக வாழ்வை வாழ்ந்து காட்டினார் அவருக்கு வந்த கடிதம் இவ்வாறு கூறியது "I dont like being in the limelight ... I like your kind of ministry behind the Scene" மற்றவரின் கவனிப்போ, மரியாதையோ, பாராட்டோ இல்லாதிருநதும் மற்றவர் சார்பாக தனனை தேவனுக்கு பலியாக வார்த்து விட்டார்.

மூன்றாவதாக, எந்தவித விளைவின்றியிருந்தாலும் தேவனுக்கு அயராது உழைத்தல். 38 ஆண்டுகளாக இஸ்லாமிய மக்கள் மத்தியில் எவ்வித கனி காணாவிட்டாலும் உண்மையோடு ஊழியம் செய்தார் ஹேரீஸ் என்ற தேவ ஊழியர் மற்றவர்களுக்காக தினமும் தன்னை பலியாக்கினார். தேவனுக்கு முன்பாகவும் அப்படியே நடந்து கொண்டார். நாமும். நம்மை இவ்விதம் தேவனுக்கு ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.

நம்மில் ஒரு சிலரை இரத்த சாட்சியாக மரிக்க அவர் அழைக்கலாம்; அல்லது ஐவனைப் போல வாழ முன் குறித்திருக்கலாம்; வாழ்வெல்லாம் அவருக்காகவே வாழ அழைக்கலாம். எப்படியாயினும் தினமும் அவருக்கு நம்மை பலியாக வார்த்து விடவேண்டும். இதன் மூலம் மற்றவருக்காகவும் பலியாக வார்த்து விடலாம் த்யாகம் என்ற பாதையில் நாம் எங்கு நிற்கிறோம்.

வருந்துகிறோம்

செட்டிநாடு தொழில் நுட்ப கல்லூரியில் படித்த E U மாணவ சகோதரன் ஜோசப் தயாநிதி Trainலிருந்து தவறிவிழுந்ததால் 20—2—84 அன்று கர்த்தருக்குள் மரணமடைந்தார். முகாமிலும், துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதிலும் மிகவும் ஆர்வத்தோடு பங்குபெற்று. மரிக்கும தருவாயில் மகிழ்ச்சியோடு இருந்து தேவனுடைய சமூகத்தில் பிரவேசித்தார். பெற்றோருக்காக ஜெபிப்போம்

UESI - TN & TNEGF.

அறிவிப்பு: பணப் பற்றாக் குறை நிமித்தமாக பக்கங்கள் குறைத்து வெளியிடுவதற்கு வருந்துகிறோம் மாதம் 4500 பிரதிகள் தற்பொழுது வெளி வருகிறது. பாரமுள்ளவர்கள் தங்கள் நன்கொடைகளை அனுப்பியும், உங்கள் தனிப்பட்ட ஜெபத்தால் இவ்வூழியத்தை தாங்குங்கள்
சந்தா அனுப்பாதவர்கள் தயவு செய்து உடனடியாக M. O. மூலம் பணத்தை அனுப்பவும்.

ஆசிரியர் குழு

ஜெபத் துணைவன்

★ வரும் கல்வியாண்டில் EU க் களிலும், மற்ற கல்லூரிகளிலும் தொடர்ந்து ஊழியத்தை நிறை வேற்றும் மாணவத்தலைவர்கள், தலைவிகள், செயற்குழு அங்கத் தினர் எழும்பவும், தெரிந் தெடுக்கப்படவும் ஜெபியுங்கள்.

★ மார்ச் 4ம் தேதி அறந்தாங்கி யில் நடை பெறவிருக்கும் ஒரு நாள் நற்செய்தி கூட்டத்திற் காகவும், அநேகர் இரட்சிக்கப் பட அங்குள்ள ஜெபக்குழு பலப்பட ஜெபியுங்கள்.

★ கோடை விடுமுறையில் நடை பெறவிருக்கும் 12 பயிற்சி முகாம்களுக்காகவும் அதனு டைய நிதித்தேவைகள், பங்கு பெறுவோர், பயிற்சி அளிப் போர், செய்தியாளர்கள் இவர் களுக்காகவும் ஜெபியுங்கள் தடைகள் ஏற்படாதிருக்க ஜெபியுங்கள்.

★ பிப்ரவரி மாதம் தமிழக முழு வதும் கொடுக்கப்பட்ட துண்டு பிரசுரங்கள் அநேகருடைய உள்ளங்களில் கிரியை செய்ய அநேகர் இரட்சிக்கப்பட ஜெபிக்கவும்.

★ தூத்துக்குடியில் V O.C College Kamaraj College, Fisheries College, I.T.I. Polytechnic, H.S.S ஜெபக் குழுக்கள் நன்கு செயல்படவும் அநேக சீடர்கள் உருவாகவும் ஜெபியுங்கள்.

★ 3, 4-3-84 தேதிகளில் மதுரை E U சீடத்துவ முகாமில் எல்லாக் கல்லூரிகளிலுள்ள விசுவாச மாணவர்கள் கலந்து கொள்ளவும், அதனுடைய ஆசீர்வாதத்திற்காகவும்.

★ கோவையில் I. T. I., P. S. G. Tech, மருத்துவ கல்லூரி, Forest College, Govt. Poly-Techs. for men and women, நிர்மலா கல்லூரி இங்கு ஜெபக் குழுக்கள், வேத ஆராய்ச்சி தொடங்கப்படவும் மாணவர் கள் பலப்படவும் ஜெபியுங்கள்.

★ மார்ச் 10 முதல் 11 வரை தாடகத்தில் நடைபெறவிருக் கும் நற்செய்தி முகாமிற் காகவும், அதனுடைய ஆசீர் வாதத்திற்காகவும், அநேக புதிய மாணவர்கள் இரட்சிக் கப்படவும்.

★ சென்னையில் மேல் நிலைப்பள்ளி மாணவர்களுக் கென HISAT (Higher Secondary Action Team) மூலமாக நடைபெறும் பணி இன்றும் பலப்பட புதிய குழுக்கள், புதிய மாணவர்கள் எழும்ப ஜெபியுங்கள்

★ சென்னை ICEU விலிருந்து புதி தாக ஆரம்பிக்கப் பட்டுள்ள 'Missionery wing' கிற்காக ஜெபியுங்கள்.

★ சென்னை பெண்கள் புதிதாக அமைத்துள்ள செயற்குழுவிற் காக, மீனாட்சி கல்லூரியில் புதி தாக துவங்கியுள்ள வேத ஆராய்ச்சிக் குழுவிற்காக ஜெபி யுங்கள்.

விசுவாசத்தின் நல்ல போராட்டம்

(கோவை, தாடகத்தில் நடைபெற்ற சீஷத்துவ முகாமில் பேசிய Rev. ஞானையா அவர்களின் செய்தியின் தொகுப்பு)

''சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது,'' என்று பவுல் கூறுகிறார் (I. கொரி 9:16). ஆம் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளாக மாறும் ஒவ்வொருவருக்கும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பது கடமையாய் இருக்கிறது. நம்முடன் பயிலும் மாணவர்களுக்கு அல்லது நம்முடன் பணியாற்றுபவர்களுக்கு நாம் இயேசுவை அறிவிக்காவிட்டால் வேறுயார் அறிவிக்கக்கூடும். அது நம்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. கடமை என்பது நம்மால் மாத்திரமே செய்து முடிக்கக்கூடிய காரியம். வேறுயாரும் அதனைச் செய்யமுடியாது. நாம் சுவிசேஷத்தை பிரசங்கியாதிருந்தால் நமக்கு ஐயோ! என்று வேதம் சொல்கிறது.

நான் எப்படி எனது நண்பனுக்கு இயேசுவைப்பற்றி சொல்வது? அவன் என்னை கேலி செய்வானோ அல்லது என்மேல் கோபம் கொள்வானோ, என்று வெட்கமும் பயமும் நம்மிலே காணப்படுகிறது. பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு தேவ வசனத்தை போதித்தார்கள் என்று வேதத்தில் வாசிக்கிறோம். ஆகவே இயேசுவுக்காக நல்ல போராட்டத்தை விசுவாசிகளாகிய நாம் போராட வேண்டுமானால் முதலில் நம்மிடம் காணப்படும் வெட்கத்தை பயத்தை விட்டுவிட வேண்டும். உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்துவிட்டார்கள் என்று சொல்லத்தக்கதாக 'சுவிசேஷத்தை அறிவிக்கும் போர்வீரராக மாற வேண்டும். போர் வீரராக மாற வேண்டுமானால் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ள வேண்டும், என்று வேதம் கூறுகிறது. ஏனெனில் மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல, வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு (எபே 6:10-18)

''பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு பலவீனருக்கு பலவீனரைப் போலானேன். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படி நான் எல்லாருக்கும் எல்லாமானேன்'' (I கொரி 9:20-22) என்று பவுல் சொல்வது போல் நாமும் எல்லாருக்கும் எல்லாமாக வேண்டும். இவன் என்னைக் காட்டிலும் சிறியவனாக இருக்கிறானே தாழ்ந்தவனாக இருக்கிறானே, இவர் என்னைக் காட்டிலும் பெரியவராக இருக்கிறாரே உயர்ந்தவராக இருக்கிறாரே நான் எப்படி இவருக்கு சுவிசேஷத்தைச் சொல்வது என்று நாம் அநேக வேளைகளில் இயேசுவை அறிவிக்க தவறி விடுகிறோம். ஆகவே பவுலைப்போல எல்லாருக்கும் எல்லாமாக வேண்டும் அதுவே நல்ல போராட்டம். அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன். (பிலி 3:11)

இயேசுவுக்காக நாம் பாடு அனுபவிக்க வேண்டும் பவுல் அடைந்த பாடுகளை நாம் II கொரி 11:23-28 வசனங்களில் வாசிக்கிறோம். நம

வாழ்க்கையில் வரும் அநேக பிரச்சனைகளினாலோ, தோல்விகளினாலோ சோர்ந்து போகாத படிக்கு விசுவாசத்தில் நிலைத்திருந்து ஜெபத்துடன் போராட வேண்டும்.

விசுவாசிகளாகிய நாம் ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் அழைப்பை ஏற்றுக் கொள்வோம். நாம் இருக்கும் இடங்களிலே சாட்சியாக வாழ, சுவிசேஷத்தை அறிவிக்கும் படியாக நமது கடமையை உணர்ந்து நல்ல போர் வீரனாக வெட்கத்தையும் பயத்தையும் விட்டு எல்லாருக்கும் எல்லாமாகி பாடுகளை சகித்து கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப் படுத்துவோம் கிறிஸ்து நமக்கு அநேக தாலந்துகளை கொடுத்திருக்கிறார். ஐந்து தாலந்து, இரண்டு தாலந்து இவைகளைப் பெற்று வியாபாரம் பண்ணி இரட்டிப்பாக்கின ஊழியக்காரர்களைப் போல் இருப்போமா? அல்லது ஒரு தாலந்தை பெற்று மண்ணில் புதைத்து வைத்து புறம்பான இருளிலே தள்ளப்பட்ட ஊழியக் காரனைப்போல் இருப்போமா?

பலவிதமான இச்சைகளினாலே விழுந்து பின்வாங்கி போகாமல், விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடி, நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வோம். அதற்காகவே நாம் அழைக்கப்பட்டோம் (1தீமோ 6:11,12)

கொஞ்சத்தில் உண்மையாய் இருப்போம். அநேகத்தின் மேல் அதிகாரியாக்குவார்.

மா. ஹென்றி டப்ஸ்,
V yr. B.E., கோவை

PRINTED MATTER

Registered No. M2/6635/81
Regd. No. TN/TR/59
Licenced to post without Prepayment

To
29. Mr. Dharm sadu, Thirum raiyur,
Nazareth Post,
Tirunelveli Dist.

Return requested:
THARISANA SUDAR
UESI-TN OFFICE,
GURU MEDICAL HALL,
TRICHY - 620017

Paul Printers, Puthur, Trichy-17.